[15th December 1961

SRI V. K. KOTHANDARAMAN : இவைகள் டெம்பரரியாக கட்டப்படுகிற காரணத்தினுல், அந்த வேலே முடிந்ததற்குப் பிறகு அவைகளே அழித்துவிடாமல், நமது ராஜ்ய சர்க்கார் உபயோகப் படுத்திக் கொள்ளுவதற்கு வேண்டி, அப்படியே விட்டுவிட வேண்டும் என்று கேட்கப்பட்டதுண்டா? இல்லே என்று சொன்னல், இனிமேலாவது அதைக் கேட்டு, நமது ராஜ்ய சர்க்கார் உபயோகத்திற்கு அதை வைத்துக்கொள்ளுவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

THE HON. SRI P. KAKKAN : எது எது நமக்குத் தேவையோ, அவைகளேக் கேட்டு நாம் வாங்கிக்கொள்ளலாம்.

Salt

*2399 Q.—SRI T. S. RAMASWAMI : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) the principle followed in leasing out or assignment of poramboke lands for salt manufacture in Coastal areas; and

(*b*) the area assigned or leased out in Tirunelveli, Thanjavur and Chingleput districts?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) The lease or assignment of poramboke lands for salt manufacture is sanctioned on the recommendation of the Salt Commissioner with preference to Co-operative Societies of Salt Workers wherever possible. Assignments are made on payment of market value subject to the condition that the lands are liable to resumption by Government at any time on repayment of land value and the value of created assets on the land. Leases are ordinarily sanctioned for a period of 25 years with an option for renewal for another 25 years subject to the conditions that no compensation except for the created assets on the land will be paid for the premature termination of the lease in the event of nationalisation and that the salt is not manufactured without valid licence under Salt Rules. The authority which leases the lands will fix the lease rent and Government reserve to themselves the right of revising this amount at the end of 25 years in the event of the lease being renewed.

(*b*)—	Tirunelveli.	Thanjavur.	Chingleput.
Extent of lands :			
(1) Assigned	553-42	..	..
(2) Leased	151-59	711-21	336

SRI V. K. KOTHANDARAMAN : உப்பு இலவசமாகக் கிடைக்க வேண்டுமென்பதற்காக வேண்டி உப்பு சத்தியாகிரஹ போராட்டத்தை நடத்தினேமே? உப்பு விலே உயர்ந்திருக்கிறதே, அதற்கான காரணம் என்ன? உப்பு விலேயைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : மற்ற பொருள்களுடைய விலே உயர்ந்ததால், இதுவும்கூட கொஞ்சம் உயருகிறது. அவ்வளவுதான்.

15th December 1961]

SRI K. ANBAZHAGAN : தலைவர் அவர்களே, உப்பு விலை 6 காசிலிருந்து 16 காசு அளவுக்கு உயர்ந்திருக்கிறது. ஏறத்தாழ 2½ மடங்கு விலை உயர்ந்திருக்கிறது. இது நியாயம் என்று அமைச்சர் அவர்கள் கருதுகிறார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : நியாயம் என்று சொல்லுவதற்கில்லை. விலை உயருகிறது என்றால், பல காரணங்களினால் உயருகிறது. அதைக்குறைப்பதற்கு வேண்டிய வழிகளையெல்லாம் செய்து கொண்டிருக்கிறோம். அதை விட்டுவிட்டு இப்பொழுது தனியாகச் சொன்னால், உப்பு எவ்வளவு குறைவாக சாப்பிடுகிறோமோ அந்த அளவுக்கு உடம்புக்கு நல்லது. (சிரிப்பு).

SRI T. S. RAMASWAMI : உப்பு விலை அதிகமாகிக்கொண்டு வருவதை தவிர்ப்பதற்காக பல இடங்களில் சும்மாக் கிடக்கும் நிலங்களை உப்பு உற்பத்திக்காக பாட்டத்திற்கோ அல்லது குத்தகைக்கோ கொடுப்பதற்கு அரசாங்கம் முன் வருமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இது நிலம் அதிகமாக இல்லாததனால் ஏற்படவில்லை. 'லேபர்' வேலை செய்பவர்களுக்கு கூலி அதிகம், மற்றவைகளும் அதிகமாக இருப்பதினால்.

Minor ports

* 2400 *Q.*—SRI M. S. SELVARAJAN : Will the Hon. the Minister for Works be pleased to state the ports proposed to be improved as minor ports during the Third Plan period ?

THE HON. SRI P. KAKKAN : The ports proposed to be improved during the Third Plan period are Cuddalore, Nagapattinam, Tuticorin, Colachel, Kilakarai and Pamban.

SRI M. S. SELVARAJAN : திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள குலசேகரப்பட்டணம் போர்டு ஏற்கனவே பல காலம் போக்குவரத்து வசதி உள்ளதாக இருந்தது. சமீபத்தில் அந்த ஜில்லாவில் இலங்கை கரையிலிருந்து திரும்பி வந்தவர்கள் அந்தப் பகுதியில் பல்லாயிரம் பேர் இருப்பதன் காரணமாகவும், அங்கு ஏற்றுமதிக்குரிய சிறு தொழில்கள் விருத்தி அடைந்திருப்பதன் காரணமாகவும், அந்தத் துறைமுகத்தையும் இந்தத் திட்டத்திலே முன்பாத்தியதை வழங்கி, சேர்ப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

THE HON. SRI P. KAKKAN : போர்ட்ஸ் கமிட்டி ஒரு ரிபோர்ட்டு சமர்ப்பித்திருக்கிறது. அதை அனுசரித்துத்தான் அரசாங்கம் இவைகளை எடுத்துக்கொண்டிருக்கிறது. குலசேகரப்பட்டிணத்தில் 'போர்ட்டு இம்ப்ரூவ்மெண்டு கமிட்டி' ஒன்று 'பாரம்' பண்ணி, நல்ல முறையில் ஆராய்ச்சி செய்து, இதையெல்லாம் எடுத்த பிற்பாடு. அதையும் பின்னால் எடுத்துக் கொள்ளலாம்.